அவனை நினைத்து...❤️💞❤️ – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/09/22/poem-12/

September 22, 2024

சினத்தில் சிவந்தவளை சிரிப்பில் சிறைப் பிடிக்கிறான் என் பேரழகன்
-தியா

அமர்ந்து பேசியதை தவிர என்ன செய்து விட்டேன் என்று என் மேல் இவ்வளவு பாசம் உனக்கு?
– Ashiya_quotes

எந்த கோணத்தில் இருந்து பார்த்தாலும் கன்னம் கிள்ளி கொஞ்சத் தூண்டும் முரட்டுக் குழந்தை அவன்
– Unknown

கன்னம்தான் குறிக்கோள், மன்னித்துக்கொள் வாய்தவறி இதழில் முத்தமிட்டுவிட்டேன் .
– Unknown

இருவருக்கும் சம்மதமெனில் புனிதத்தில் சிறந்தது காமம் !
– Unknown

இதுவரை நான் குறையாக நினைத்ததை எல்லாம் அவன் கொஞ்சி கொஞ்சி ரசிக்கிறான்..!
– தாரா

குறைகளுக்கு முன் என் நிறைகள் எங்கு சென்றது.
– இனிதி.

அவன் அழகை ரசிக்க ஆயிரம் பேரால் முடியும் ஆனால் அவனை அவனாகவே ரசிக்க என்னால் மட்டுமே முடியும்…
– Dhana…

அவளின் அதிகபட்ச திமிரெல்லாம்.,
“அவன் எனக்குச் சொந்தம்..! என்ன தாண்டி யார் வந்துவிடமுடியும்..!” என்று தான்..!
-அவினி

எல்லா பெண்களுக்கும் கிடைத்து விடுவது இல்லை ……. தானக்காக கண்ணீர் சிந்தும் அளவிற்கு ஒரு ஆணின் உண்மையான அன்பு!!! அந்த அன்பில் என்னவன் சிறந்தவனே அவன் என்றும் என்னவன்
– Unknown

ச்ச்சீ…எனக்கே இவ்ளோ ஆசை இருக்குன்னு உன்னாலதான்டா தெரிஞ்சிகிட்டேன்” என நீ வெட்கம் கொள்ளும் அளவுக்கு கழித்திடுவோம் சில இரவுகளை !
– ழகரன்

ஒருத்தியைத் தொழுது அழுது அவளிடமே அழிந்து போகத் துடிக்கும் உக்கிர வேட்கையைத்தான் காதல் என்கிறான் ஆண்!

– Unknown

Ennavan

அவனின் அளவில்லா காதலுக்கு அழியாத எஜமானி நான்!!

– Unknown

அவன்

அவன் கண்ணீரைக் கண்டவள் நீயாக இருப்பின் அவன் உயிராய் காதலிப்பவள் நீயாக இருப்பாய்!

– avalin__.varigal

இருவருமே அழுது ஓய்ந்துவிட்டோம் இப்போது சிரிக்க தொடங்க வேண்டும் காதல் இரண்டிற்கும் பொதுவானது தானே.
– இனிதி

என்னவன்
நான் குறையென நினைப்பதையெல்லாம் அழகென கொஞ்சிட அவனால் தானே முடியும்!
– avalin__varigal

வாழ்க்கையை வெறுத்த பிறகும் மீண்டும் வாழத் தொடங்கினேன் காரணம் நீ வந்ததால்..!
– Unknown